பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 29 திங்கட்கிழமை (14-12 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 18

# மட்டக்களப்பின் தென்பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

## விசேட அதிரடிப் படையினரே அதிக எண்ணிக்கையில் குவிப்பு

கொழும்பு, டிசம்பர். 14

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் "ஜெயகங்கா" என்ற பெயரில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையில் விசேட அதிரடிப் படையினரே அதிக அளவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

ஓமண்கட்டாறு, இலுப்பைபடிச்சேனை, பள்ளிவெட்டுப்பு, கலியமடு ஆகிய பகுதிகளிலேயே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஸ்ரீலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

கடந்த சில வாரங்களாக மட்டக்களப்புப் பகுதிக்கு பீரங்கிகளும், கவச வாகனங்களும் பெருமளவில் அனுப்பப்பட்டதாகவும்—

பெரும் எண்ணிக்கையான அதிரடிப் படையினர் மட்டக்களப்புப் பகுதியில் குவிக்கப்பட்டதாகவும்—

அங்கு பல அதிரடிப்படை முகாம்களும், காவலரண்களும் அமைக்கப்பட்டதாகவும்—

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 18ஆம் திகதி தொடக்கம் மீட்பு நிதி செலுத்தலாம்

யாழ்ப்பாணம், டிச. 14

தமிழீழ மீட்பு நிதி எதிர்வரும் 18 ஆம் திகதியில் இருந்து உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக நேரடியாக சேகரிக்கப்படவிருக்கிறது.

இதுவரை மீட்பு நிதிக்கட்டுத் திட்டத்தில் பங்கேற்காத— வசதியுள்ளவர்கள்— தமிழீழ மீட்பு நிதிக்கு தங்கள் பங்களிப்பை செய்வதற்கு வாய்ப்பாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும்—

மீட்பு நிதியாக பத்தாயிரம் ரூபா மட்டும் பணமாகப் பெறப்படும் என்றும்—

பவுண் நகைகளோ,

[2 ஆம் பக்கம் பார்க்க]

## குடியிருப்புப் பகுதிகள் மீது இரவில் தொடரும் தாக்குதல்

பலாலி முகாம் படையினர் இரவு வேளையில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி, நாள் தவறாது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதே சமயம் சேந்தான்குளம், மாதகல் கடற்பகுதிகளில் இருந்தும் பீரங்கி தாக்குதலும் நடத்தப்படுகிறது.

இதற்கிடையில்—

இளவாலை, அம்பனை ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் அரை மணி நேரம் தொடர்ச்சியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இவ்வேளையில் பலாலியில் இருந்து ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது. அளவெட்டி வடக்கிலும் ஒரு ஷெல் விழுந்து வெடித்தது. (ஒ-68-13)

## அயோத்தி சம்பவங்களால் 'சார்க்' இனி வலுப்பெறாது

### செய்தி நிறுவனம் கருத்து

அயோத்தி அசம்பாவிதங்களின் பின்னர் 'சார்க்' நாடுகளின் அமைப்பு வலுப்பெறுவது மிகவும் கடினமான காரியமாகும்.

''ரோய்ட்டர்'' செய்தி ஸ்தாபனம் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறது.

சார்க் அமைப்பில் உள்ள நாடுகளிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தப் போவதாக அமைப்பின் தற்போதைய தலைவரான இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்திருப்பினும் கூட, அயோத்தி சம்பவங்களின் பின்னர் 'சார்க்' அமைப்பைப் பலப்படுத்துவது என்பது மிகவும் கடினமான காரியம் என்று ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (உ-எ)

## குடாநாட்டு மருந்து நிலைவரம்; சரியான தகவல் இல்லையாம்

### கொழும்பு இணைப்பதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். மாவட்ட மக்களின் போஷாக்கு நிலை மற்றும் மருந்துத் தட்டுப்பாடு ஆகியவை குறித்துச் சரியான தகவல்கள் கொழும்புக்கு கிடைப்பதில்லை. அதனால் அவை குறித்து சரியான நடவடிக்கையை எடுப்பதற்குச் சிரமமாக உள்ளது.

— இவ்வாறு கொழும்பில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் இணைப்பதிகாரி திரு. எஸ். சோதிராஜா கவலை தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து இங்குள்ள நிலைமை குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார்.

அவர் மேலும் தனது தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது வாரத்தில் கொழும்பு இணையக் கூட்டம் நடைபெறுவது வழக்கம். அந்தக் கூட்டத்தில் வெளிநாட்டு தூதரக அதிகாரிகள், அரச மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்துகொள்வார்கள் — அக்கூட்டத்தில் யாழ்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையே அடுத்த வார முற்பகுதியில்

கொழும்பு, டிச. 14

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை அடுத்த வார முற்பகுதியில் வெளியிடப்படும் என்று தெரியவருகிறது.

சமஷ்டி அரசமைப்பு முறை யோசனையை பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் நிராகரித்திருப்பதனால்—

வடக்கு-கிழக்கு இணைப்பு அற்ற இந்திய மாநிலங்கள் போன்ற மாகாண சபை அமைக்கப்படவேண்டும் என்ற யோசனையே இடைக்கால அறிக்கையில் சிபாரிசு செய்யப்படலாம் என்று எதிர்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு உணவுகொண்டுவருவதில் தடங்கல்

### கூட்டுப்படைத் தலைமையகம் நிபந்தனை

யாழ்ப்பாணம், டிச.14

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இரண்டு தமிழ் மாவட்டங்களுக்கும் தரை மார்க்கமாக உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு அரசு முனைந்துள்ளது.

அதன் முதற்படியாக, தரை மார்க்கமாக, வாகன அணி மூலம் உணவுப் பொருள்களை எடுத்து வருவதானால் அதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கூட்டுப் படைத் தலைமையகம் நிபந்தனை விதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த இரு மாவட்டங்களுக்கும் கப்பல் மூலம் உணவுப் பொருள் அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டிருந்து. தரை மார்க்கமாக வாகன அணிகள் மூலம் அவை கொண்டு வரப்படுகின்றன. ஆரம்பத்திலிருந்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமே வாகன அணிகளுக்குப் பாதுகாப்பு வழங்கி வருகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு தோல்வியால் புலிகளுக்கு அதிக செல்வாக்கு

### யாழ். எம்.பி. ஒருவர் சொல்கிறார்

கொழும்பு, டிச. 14

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு எதுவித முடிவுக்கும் வர இயலாமல் தோல்வி நிலையை எட்டியிருப்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செல்வாக்கை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

ஈ.பி.ஆர்.எல். எவ்வைச் சேர்ந்த எம்.பியான பிரேமச்சந்திரன் இந்தக் கருத்தை வெளியிட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

தெரிவுக் குழுவின் தோல்வியால் அரசியல் ரீதியான தீர்வை அரசாங்கம் காண இயலாமல் போனதோடு விட்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை தெரிவுக்குழுவின் காலம் இழுத்தடிப்பு?

லண்டன், டிச. 14

ஜனாதிபதி தேர்தல் நடக்கும் வரை தெரிவுக் குழுவின் பதவிக் காலம் நீடிக்கப்படலாம் எனக் கருதப்படும் அதே வேளை —

ஜனாதிபதித் தேர்தல் வரை [illegible] கிறது.

இவ்வாறு பி.பி.ஸி தமிழோசை தனது கண்ணோட்டத்தில் நேற்றுத் தெரிவித்தது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதில் சிங்களக் கட்சிகளுக்கும் கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படாததால் தமிழ்க் கட்சிகளைத் தமிழ் மக்கள் மேலும் ஒதுக்கி வைப்பர் எனவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

தெரிவுக் குழுவின் இப்போ

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவின் கலைகள் பயிலகம்
# SCHOOL OF FINE ARTS

## புதிய மாணவர்களைச் சேர்த்தல் - 1993

கீழ்க்காணும் கற்கை நெறிகளுக்கான விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன;

**வார இறுதிநாள் வகுப்புகள்**

நடனம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், வீணை, ஓர்கன், கிற்றார் சித்திரம்.

**வாரநாள் வகுப்பு**

வாய்ப்பாட்டு
(விசேட வகுப்புகள் G. C. E O/L - A/L
வ. இ. சங்கீத சபா பரீட்சை)

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்;

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 12 - 1992

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலாளர்

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி, யாழ்.
(இ/3990)



## யா / யாழ். இந்து மகளிர் கல்லூரி
### புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளுக்கான
# ஆண்டு-6 அனுமதி - 1993

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது கல்லூரியில் சேர விரும்பும் மாணவிகள் 20-12-92 க்கு முன் தாம் கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெயர், சுட்டிலக்கம், பெற்ற புள்ளி என்பவற்றிற்கான அத் தாட்சிக் கடிதத்துடன் நேரில் வந்து பதிவு செய்து கொள்ளவும்.

— அதிபர் —
யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(இ/3991)



# வெற்றிடங்கள்

யாழ். நகரில் உள்ள ஒரு முன்னணி நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. தட்டெழுத்தாளர் ஆங்கிலம் / தமிழ் (பெண்கள் மட்டும்)
2. போட்டோ பிரதி இயந்திர இயக்குனர்
3. காவலாளி [இரவு - பகல்]
4. கணக்காளர்
5. லிகிதர்
6. மொழிபெயர்ப்பாளர்
7. மருத்துவ ஆய்வுகூட உதவியாளர்
8. களஞ்சியப் காப்பாளர்
9. சிற்றூழியர்

மேற்கூறிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் நாளை செவ்வாய் 15-12-92 முற்பகல் 9 மணிக்கும் 10. 30 மணிக்கும் இடையில் பின்வரும் முகவரியில் நேரில் சமுகமளிக்கவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

## வில்லியம் ஹாவே
## ஞாபகார்த்த மருத்துவமனை
17, கண்டி றோட், சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(இ-3989)



# உதயன் அக்கடமி
நல்லூர்.

## ஆண்டு 4, 5 (புலமைப்பரிசில்)

கணிதம் — திருமதி மகேந்திரநாதன்
— எம். தனபாலன்
தமிழ் — கோபி
ஆங்கிலம் — பாபு

புதிய பிரிவு ஆரம்பம்: 19 - 12 - 1992

(23625) பிற்பகல் 3 மணி


## நாளை

வண்ணார்பண்ணை, டிச. 14

அச்சுவேலி கோப்பாய் தெற்கு பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-162)

## மாணவர் உணவு முத்திரை

வலிகேற்கு, டிச. 14

செப்டம்பர் மாதத்துக்குரிய மாணவர் உணவு முத்திரைகளை வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சுழிபுரம் ஆகிய கோத்தணிகளுக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்கள், நாளை செவ்வாய்க்கிழமைக்குப் பின்னர் சங்கானை உ. அ. அ. பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

(த-175)

## குமாரியில் மருந்து

யாழ்ப்பாணம், டிச. 14

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள குமாரி கப்பலில், யாழ் போதனா வைத்தியசாலையின் பாவனைக்குரிய மருந்துவகைகள் சிலவும் அனுப்பப்பட்டுள்ளன.

வழமையாக வரும் மருந்துவகைகளின் இனங்கள், மிகக் குறைந்தளவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் 57 ஒட்சிசன் சிலிண்டர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(த-15)

## பல்கலை மாணவன் நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், டிச 14

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட மாணவர் ஒருவர் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி மரணமானார்.

சித்த மருத்துவ பீடத்தைச் சேர்ந்த நான்காம் வருட மாணவனான சீ யோகநாதன் என்பவரே கைதடியில் உள்ள மருதமரக் குளத்தில் நீரில் மூழ்கி இறந்தவராவார். அவருக்கு வயது 25. நேற்றுக் காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

(அ-13)

## புத்தூக்க வகுப்பு

யாழ்ப்பாணம், டிச. 14

சேவையில் இருக்கும் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கான புத்தூக்க வகுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்வி அலுவலக முகாமைத்துவப் பிரிவில் நடைபெறவிருக்கிறது.

சகல பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களும் நாளை செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு கல்வி அலுவலகத்தில் தத்தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-3)

**இடைக்கால...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்வுக்குழுவை தமிழ்க் கட்சிகளுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் பகிஷ்கரிக்க முடிவு செய்திருப்பதாகவும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

**18 ஆம் திகதி...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காசோலைகளோ ஏற்கப்படமாட்டா என்றும்— தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

மீட்பு நிதி செலுத்துவதற்கான [illegible] வெளியிடப்படும் என்றும் [illegible].

(க-3)

## ஆங்கில பயிலுநர் ஆசிரியர்: விரைவில் இறுதிப் பரீட்சை

யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்ற ஆங்கில பயிலுநர் ஆசிரியர்களுக்கான முதலாண்டு இறுதிப் பரீட்சைகள் அடுத்த வாரம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

இந்த பரீட்சைக்கான வினாப்பத்திரங்களும், அனுமதி அட்டைகளும் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக நேற்று தகவல் கிடைத்திருப்பதாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. துரை இராசரத்தினம் தெரிவித்தார்.

(ஒ-3)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்; மாத இறுதியில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இம் மாத இறுதியில் வழங்கப்படவிருக்கின்றன;

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நியமனம் வழங்கப்பட்ட சுமார் 400 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கும் இதுவரை கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சில் இருந்து கட்டுநிதி கிடைக்காததாலேயே கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை என்றும் —

கட்டுநிதி இவ்வாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-3)

## இந்தியாவுக்கு எதிராக இஸ்லாமிய நாடுகள் தடை?

### உலக முஸ்லிம் காங். கோரிக்கை

இஸ்லாமபாத், டிச. 14

இந்தியா மீது பொருளாதாரத் தடை விதிக்கும்படி இஸ்லாமிய நாடுகளை உலக முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

பாகிஸ்தானில் நடந்த முஸ்லிம் காங்கிரஸின் கூட்டத்தில் அயோத்தி அசம்பாவிதங்கள் பற்றி ஆராயப்பட்டது.

அதன் பின்னரே முன்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவுக்கு எரிபொருள் விற்பனை செய்வதை வளைகுடா நாடுகள் நிறுத்த வேண்டும் என்றும் —

வளைகுடா நாடுகளில் வேலை செய்யும் இந்துக்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)


# கண்ணீர் அஞ்சலி

## செல்வன் சீ. யோகநாதன்

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை
4 ஆம் வருட மாணவன்
செல்வன் சீ. யோகநாதன் அவர்கள்
13.12.92 அன்று அகால
மரணமானார்.
அவருக்கு எமது இதயபூர்வமான
கண்ணீர் அஞ்சலியைச்
செலுத்துகிறோம்.

சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.
(இ/3992)



# 12ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 06 — 1914
மறைவு: 26 — 11 — 1980

அமரர்
## கந்தையா நடராஜா (பொன்னுத்துரை)
(பிரபல அரசாங்க கட்டட ஒப்பந்தகாரரும், நடராஜா அன் சன்ஸ் உரிமையாளரும்)

திதி: 14—12—1992

ஐயா,
ஆண்டுகள் பன்னிரண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை
விட்டு அகலவில்லை.

குடும்பத்தினர்.
112, முதலாம் குறுக்கு வீதி,
வவுனியா.
(23630)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரமங்களுக்கு மத்தியில் இயங்கும் யாழ். ஆஸ்பத்திரி 'எக்ஸ்ரே' பிரிவு

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ் போதனா வைத்திய சாலையின் எக்ஸ்ரே படப் பிரிவு பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருவதாக அறியவருகிறது. எக்ஸ்ரே படம் எடுக்கத் தேவையான பிலிம்கள், குறிப்பிட்ட சில மருந்துவகைகளின் கையிருப்பு முடிவடையும் நிலைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி மேலும் அறிய வருவதாவது:

எக்ஸ்றே பிரிவில் இருக்கும் இயந்திரக் கருவிகள் மாற்றப்பட வேண்டிய நிலையை அடைந்திருந்தும்கூட இங்குள்ள தொழில் நுட்பவியலாளர்களின் திறமையினால் அவை இயங்க வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஐ. வி. பி. எனப்படும் எக்ஸ்றே படம் எடுக்கப் பாவிக்கப்படும் மருந்துப் பொருள்கள் கடந்த 3 மாதங்களுக்கு முன்பே யாழ். வைத்தியசாலையில் முடிவடைந்து விட்டதாகவும், இதுபற்றி பல தடவைகள் கொழும்பு தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டும் இதுவரை பலன் எதுவும் இல்லை என்றும் எக்ஸ்றே பிரிவுத் தலைமைத் தொழில் நுட்பவியலாளர் தெரிவித்தார். பெரும்பாலான நோயாளிகளுக்கு இந்த எக்ஸ்றே படமே எடுக்க வேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

கடந்த மாதம் எக்ஸ்றே பிரிவுக்கு குறைந்தளவு பிலிம்களே கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டதாகவும் இவை இன்னும் இரண்டு வாரத்தில் முற்றாக முடிவடைந்துவிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சிறிய அளவிலான எக்ஸ்றேக்கள் எடுப்பதற்கான பிலிம்கள் ஏற்கனவே முடிவடைந்து விட்டதனால் பெரிய பிலிம்களிலேயே சிறிய படங்கள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக பெரிய பிலிம்களும் முடிவடையும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து மிக விரைவில் எக்ஸ்றே பிரிவு ஸ்தம்பிதம் அடையும் ஆபத்து இருப்பதாக அறிய வருகிறது. (த-15)

## பயிலுநர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

தற்போது சேவையில் உள்ள பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்கள், அவர்களை நிரந்தரமாக்குவதற்கு என நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடையும் பட்சத்தில் — பரீட்சை நடைபெற்ற திகதியிலிருந்து அவர்கள் நிரந்தரமாவர் என்றும், அவர்களுக்கு புதிய சம்பளம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பரீட்சை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. சுமார் 6 ஆயிரம் பயிலுநர் பட்டதாரிகள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். (த)

## யாழ். வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிச. 14

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் எண்ணிக்கை இந்த மாதத்தில் இருமடங்காக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் சராசரியாக நாளொன்றுக்கு எழுநூற்றி ஐம்பது முதல் எண்ணூற்றி ஐம்பது வரையான நோயாளர்களே வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர்.

கடந்த சில நாட்களாக நாளொன்றுக்கு சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு சமுகமளிப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-15)

## லண்டன் நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பிரபா பிறந்த நாள் "கேக்"!

கொழும்பு டிச. 14

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாள் "கேக்" லண்டனில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் இடையே கடந்த மாதம் 30 ஆம் திகதி பரிமாறப்பட்டதாம்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளுக்காக வழங்கப்பட்ட "கேக்" அது என்பதை அறிந்து கொள்ளாத இரண்டு பெண் இராஜதந்திரிகள், அதைத் தூதரகத்தின் சக ஊழியர்களுக்கும் வழங்கியதாக அச்செய்தியிலிருந்து தெரியவருகிறது.

கடந்த நவம்பர் 20 ஆம் திகதி அலுவலக வேலை நேரம் முடிவுற்ற பின்னர் — இரவு 7.05 மணியளவில் பிறந்தநாள் கேக் வைக்கப்பட்ட மூன்று தட்டுகள் (Trays) தூதரகத்தில் கையளிக்கப்பட்டதாகவும் —

தூதரகத்தின் மூன்றாம் மாடியில் உள்ள தொடர் மாடியில் வசித்து வரும் — இலங்கைத் தூதரகத்தில் புதிதாக நியமனம் பெற்ற — ஒரு இராஜதந்திரி அவற்றைப் பொறுப்பேற்றார் என்றும் "கேக்" சாப்பிட்டவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

பிரபாகரனின் பிறந்த நாளுக்காக வழங்கப்பட்ட "கேக்" அது என்பதை அறியாத இரு பெண் இராஜதந்திரிகள் நவம்பர் 30 ஆம் திகதி அவற்றை தமது சக ஊழியர்களுக்கு பரிமாறினராம்.

பரிமாறிய இராஜதந்திரிகளில் ஒருவர் இலங்கைத் தூதரகத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்பவர் என்றும் —

இத்தகவல்களை தூதரக ஊழியர் ஒருவர் வெளியிட்டார் என்றும் —

இச்சம்பவம் குறித்து அவர் ஆத்திரமடைந்ததிலும் பார்க்க வெட்கமடைந்த நிலையில் காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரபாகரனின் பிறந்தநாள் கேக் பரிமாறப்பட்டதன் மூலம் இலங்கைத் தூதரகத்தின் அப்பாவி அலுவலர்கள் ஏமாற்றப்பட்டனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## நாவலர் குருபூசை தினமான நாளை நூல் வெளியீடுகளும் கூட்டங்களும்

யாழ்ப்பாணம், டிச. 14

நாளை செவ்வாய்க்கிழமை நாவலர் குருபூசைத் தினமாகும். அதனையொட்டி அன்றைய தினம் பல்வேறு இடங்களிலும் நினைவுக் கூட்டங்கள், நூல் வெளியீட்டு நிகழ்வுகள், பண்ணிசை நாட்டிய நிகழ்ச்சிகள் என்பன நடைபெறவுள்ளன.

**சைவபரிபாலன சபையில்**

நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் குருபூசையும் 'இந்து சாதனம்' ஆசிரியர் திரு. ந. சிவப்பிரகாசம் எழுதிய 'நாவலர் நயம்' என்ற நூலின் வெளியீட்டு விழாவும் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

சைவபரிபாலன சபைத் தலைவர் சிவ இராசேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நல்லை ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். செல்வி புஷ்பா செல்வநாயகம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் க. சொக்கலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

**ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில்**

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் குருபூசையும் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் எழுதிய 'ஆறுமுக நாவலர்' என்ற ஆங்கில நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு நூலின் வெளியீடும் நாளை காலை எட்டு மணிக்கு நடைபெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

மகேசுர பூசையும் அன்னதானமும் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

**வண்ணை வைத்தீசுவரன் கோவிலில்**

ஆங்கிலத்தில் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் எழுதிய திரு. வை. ஏரம்பமூர்த்தி தமிழாக்கம் செய்த நூலின் வெளியீடு வண்ணை வைத்தீசுவரன் கோவில் மண்டபத்தில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறும்.

[illegible] திரு. எஸ். எம். [illegible] தலைமையில் நடைபெறும் விழாவில் திரு. க. சொக்கலிங்கம், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு நாக. சண்முகநாதபிள்ளை, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி இ. இராசரத்தினம், வண்ணை வைத்தீசுவரன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. வை. கந்தசாமி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

**பல்கலைக்கழகத்தில்**

யாழ் பல்கலைக்கழக இந்து மன்றமும் ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபையினரும் இணைந்து நடத்தும் குருபூசையில் நாளை காலை 8 மணிக்கு ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசையும் மாலை 3-30 மணி தொடக்கம் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் தேவார இசைமணி தாவடியூர் என். ஆர். திருஞானசம்பந்தன் பண்ணிசை பாடுவார்; கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, செந்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், யாழ் பல்கலைக்கழக இந்து மன்றத் தலைவர் செல்வன் எஸ். சிவஞானம், செயலாளர் செல்வன் எஸ். சண்முகராஜா ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தினர் நாத நிகழ்ச்சி ஒன்றை வழங்குவர்.


**திருநெல்வேலியில்**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றத்தின் ஆதரவில் குருபூசை நாளை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் கலாநிதி கி. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. விநாயகமூர்த்தி சிறப்புரை ஆற்றுவார். (த)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 03 — 12 — 1968

மறைவு: 30 — 10 — 1992

### கிருஸ்ணபிள்ளை ஜெயக்குமார்

"காலனாலும் பறிக்க முடியாத ஜெயா
காலமெல்லாம் உன் நினைவே"

முன்னம் நாம் செய் புண்ணியத்தால்
முத்தாய் வந்து இங்குதித்தாய்
கன்னம் குழியக் குறுநகையும்
கதையும் பேசி மகிழ்வித்தாய்
அன்னம் சொர்ணம் தானீந்து
அன்னை சுற்றம் காப்பேனென்று
சொன்ன தெல்லாம் பொய்யாச்சே
சோர்ந்தோம் நாமே உன் பிரிவால்.

அன்னை மண்ணை நீ விட்டு
அயலான் மண்ணில் உயிர் துறக்க
என்ன பாவம் செய்தோம்
நாம் என்று காண்போம் உன் முகத்தை
வண்ண வதனம் வாரசமல்
வாழும் நிலையைக் காணாமல்
கண்ணே ஜெயா கலங்குகின்றோம்
காலமெல்லாம் உன் நினைவால்.

தந்தை அருகே சென்றிடத்தான்
தனியே நீயும் சென்றாயோ
பந்த பாசம் வாழ்வெல்லாம்
மாயை என்றா ஜெயா சொல்லாய்
அந்தப் பாச வினையறுக்கும்
ஆறு முகன் அடியிணையே
வந்திக்கின்றோம் வாழ்த்துகின்றோமுன்
ஆத்ம சாந்திக்காக நிதம்.

தாய், சகோதர, சகோதரிகள்,
மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்.

1051, காவிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(5648)

---

## தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ★ 140ஆவது பிறந்த தின விழா ★

இடம்: பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமம்

காலம்: 16 — 12 — 1992 புதன்கிழமை
பகல் 11மணி முதல் மாலை 6மணி வரை

விசேட பூஜை, பஜனை, பிரசாதம்

விழாவில் சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் சிறப்புப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு வைப்பார்.

வைத்திய கலாநிதி மூ. க. முருகானந்தன் (M.B.B.S.) சிறப்பு வெளியீட்டின் முதற் பிரதியை பெற்றுக்கொள்வார்.

★ அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். ★

குறிப்பு: பருத்தித்துறை, ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் அன்னையின் அருளால் 1969ஆம் ஆண்டில் அவரது பிறந்த தினத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

(சி-6988)

---

## ரஜனி சிகை அலங்கரிப்பு நிலையம்,

இல: 50, நவீன சந்தை - யாழ்ப்பாணம்.

விருப்பத்திற்கு ஏற்ற முறையில் ஆண், பெண் இருபாலாருக்கும் "கீற்றர்" பிடித்து நவீன முறையில் தலைமுடி வெட்டப்படும்.

(28626)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

மெய்கண்டான் கலண்டர், டயறிகள், லீலா கலண்டர், டயறிகள் மற்றும் இதின் கவி கார்ட் வகைகள் விற்பனையாகிக்கொண்டு இருக்கின்றன. மகமிலன், 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம், நல்லூர் ஸ்ரீசாந்தா புத்தக சாலை. [இ-2886]

**விற்பனையாகின்றன**

O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் உச்சப் புள்ளி பெற உதவும் மனைப் பொருளியல், சங்கீதம், இந்து நாகரிக வினா-விடைகள் விற்பனையாகின்றன. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தக சாலை, யாழ்ப்பாணம். (23585)

**விற்பனைப் பயிலுநர்**

பிரபல புத்தக கடைக்கு விற்பனைப் பயிலுநர்கள் தேவை. நேரில் வரவும். 422 (616), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (இ-3972)

**அப்பியாசக் கொப்பிகள்**

பாடசாலை மாணவர்களுக்கு மலிவு விலையில் அப்பியாசக் கொப்பிகள் விற்பனையாகின்றன. விநியோகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கருகாமை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [இ-3970]

**அச்சுக்கோர்ப்பாளர்தேவை**

அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. உடனடியாக நேரில் வருக. ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். [இ-2830]

**தேவை**

புடவை வியாபாரம் செய்யக்கூடிய பெண்பிள்ளை ஒன்று தேவை. ஒரு மைல் சுற்றாடலில் இருப்பவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும். க. சுந்தரப்பிள்ளை அன் சன்ஸ், இல. 21, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (23618)

**இயில் இயில் விதை**

அடுப்புக்கு விறகாகவும், கால்நடைக்குத் தீவனமாகவும் உதவும் இயில் இயில் விதைப் பக்கற் ஒன்று பெற ரூபா 2/- பெறுமதியான அஞ்சல் முத்திரை கடிதத்துடன் அனுப்பி வைக்கவும். "மின்னைற்." (இ-3984)

**கலர்பிலிம் பிறின்ரிங்**

நியாய விலையில், துரித கதியில் கலர் பிலிம்களை பிரதியாக்கம் செய்ய நாடுங்கள்! லூயிஸ் போட்டோ, மணிக்கூட்டு வீதி, (எழிலகத் துக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (5644)

# கணிதம்

(ஆண்டு 7 — 11வரை)

ஆரம்பம்:

**15 - 12 - 1992**

(பிற்பகல் 3 மணி)

ஆசிரியர்:

**பா. கிருபாகரன்**

327, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(நாவலர் மண்டபம் முன்பாக)

விவரங்கள் நேரில்.

(இ-2807)

---

பழைய மாணவர் சங்க

# வருடாந்த பொதுக்கூட்டம்

அச்சுவேலி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 - 12 - 1992 (ஞாயிறு) அன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளதால், பழைய மாணவர்கள் அனைவரையும் இதில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

— செயலாளர்.

(23622)

---

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 — 03 — 1941

உதிர்வு: 26 — 11 — 1991

அமரர்

## செல்லத்துரை கனகசபாபதி

(முன்னாள் A. G. A. ஒப்பந்தக்காரர்)

**திதி: 14-12-1992**

கனகசபாபதி நடமிடும் ராஜன்
கனகசபையில் ஆடிடும் ராஜன்
ஐந்தொழில் புரியும் அம்பலவாணனின்
தாண்டவ நடனம் தடையின்றி நிகழ்வு
ஆசை எமிந்து சாம்பலாகினார்
அடைவது கனகசபாபதி அடியே;

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்.
மாமன், மாமி, உறவினர்கள்.


நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(23621)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 28 — 12 — 1927



மறைவு: 12 — 11 — 1992

கரணவாய் தெற்கைச் சேர்ந்த

## அமரர் சரவணமுத்து பரமசாமி

(ஓய்வுபெற்ற வலைப்பாலன இலாகா — பிராந்தியப் பொறுப்பாளர்)

அன்புடனும், பாசத்துடனும் எங்களை எல்லாம் சிறப்புடன் வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் துதிக்கின்றோம்;

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரி, குடும்பத்தினர்.

வீரப்பராயன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

[இ-3982]

---

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 23 — 05 — 1936



மறைவு: 14 — 12 — 1987

திருமதி

## சிவானந்தமணி சுப்பிரமணியம்

**திதி: 18 — 11 — 1992**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் எங்களை வளர்த்து
உற்றோரையும் மற்றோரையும் அரவணைத்து
நல்லறிவுடன் பார்வில் எமை வளர்த்த தெய்வமே!
நீங்கள் வாழ்ந்த நாள் முழுவதும் எமக்காக வாழ்ந்து
வளம் பல கண்டீர்கள்
காலனவன் உங்களை எங்களிடமிருந்து
இடை நடுவில் பிரித்துவிட்டான்
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் ஆறாது எம் துயரம்
எம் உயிருள்ளவரை உங்கள் புன்னகை பூத்த முகம்
எங்கள் இதயத்தில் நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
பிரார்த்திக்கும்!

அன்புக்கணவன், அருமைப்பிள்ளைகள்,
ஆசை மருமக்கள்.
பாசமுள்ள பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

இல. 429, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(23580)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## சங்கரப்பிள்ளை தம்பிஐயா

(ஓய்வுபெற்ற மலேசிய கல்வித் திணைக்கள நிதிப் பொறுப்பாளர்)

மலர்வு: 16—03—1906 உதிர்வு: 14—11—1992

எங்கள் உள்ளங்களில் என்றும் ஒளி வீசி, நிலையாக நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்தாலும், நீங்கள் எம்முடன் இருக்கின்றீர்கள். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றும் பிரார்த்திப்போம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(23592)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அக்கரைப் பச்சை

கொழும்பில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு கைது செய்யப்படுவோரில் ஜி. சி. ஈ. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் அடங்குவர்.

வடக்கு-கிழக்கில் மோதல்களுக்குள் முடங்குவதற்கு முன்னர் மிகப் பரவலாக, ஆண்டுக்கணக்காக பொலிசாரும், படையினரும் நடத்திக் கைதேர்ந்த அட்டூழியங்களே சுற்றிவளைப்பு, தேடுதல், கைது என்பனவெல்லாம்.

இப்போது வடக்கில் வைத்துத் தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதற்கான தனிலைமை அறவே இல்லை; கிழக்கிலும் அதற்கான சந்தர்ப்பம் குறைவு. எனவே கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இது ஒருவகையில் அவர்களுக்கு மேலதிக உழைப்பையும் தரும் என்பதால் தீவிரமாகவே தமது 'கடமை' களைச் செய்கிறார்கள்!

ஆனால் கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைதாவது குறித்து பெரிதாக விசனப்படுவதற்கு எதுவுமில்லை. ஏனெனில் இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். இப்போது கொழும்பில் கைதாவோரில் மிகப் பெரும்பாலானோர் நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போனவர்களே!

வடக்கு - கிழக்கில் வாழ்வதற்குப் பயந்தும், போராட்டத்தில் இருந்து ஒதுங்கித் தூரத்தே நிற்கக் கருதியும் கொழும்புக்கு ஓடியவர்களே இவர்கள். வடக்கு - கிழக்கில் வாழும் மாணவர்கள் கல்வி கற்கவில்லையா? பரீட்சைகளில் சித்தி அடையவில்லையா? கொழும்புக்கு ஓடினால்தான் படித்து முன்னுக்கு வரமுடியும் என்று கருதியவர்கள் இப்போது பொலிஸாரின் கையில் அகப்பட்டு, சிறைக்குள் போய் எப்படிப் படிக்கப் போகிறார்கள்?

—இது நான் பிறந்த பூமி. வாழ்வும் இங்கே; சாவும் இங்கே. பிறந்த நான் எப்போதோ ஒரு நாள் இறக்கத்தான் போகிறேன். அது இருபதிலானாலென்ன, எழுபதிலானாலென்ன இரண்டும் ஒன்றுதான். வாழ்க்கை என்பது கஷ்டம் நிறைந்ததே. கஷ்டங்கள், நஷ்டங்களுக்குப் பயந்து அன்னை மண்ணை விட்டு ஓடமாட்டேன். அவள் என்றும் எனக்கு வாழ்வு தருவாள் — இத்தகைய தன்னம்பிக்கை உடையவன் பயந்து கொழும்புக்கு ஓடமாட்டான். ஓடவில்லை.

இங்கே பிரச்சினை, கஷ்டம், பாதுகாப்பில்லை என்று ஓடியவர்களுக்கு கொழும்பில் கஷ்டமில்லையா? அங்கே தக்க பாதுகாப்பு உண்டா? பிரச்சினைகள் இல்லாமல் வாழ்கிறார்களா? வெளிநாட்டுக்குப் போனவர்கள் என்ன சொர்க்க போகத்தையா அனுபவிக்கிறார்கள்?

இவற்றை அறிந்தும் அறியாதவர்களாக இன்னும் பலர் கொழும்புக்கும் அங்கிருந்து வெளிநாட்டுக்கும் ஓட நினைக்கக்கூடும். அவர்கள் யதார்த்தைப் புரிந்து கொண்டால் நல்லது.

அடுத்தவன் மண்ணில் அஞ்சி நடுங்கும் அடிமையாகவும்; வேண்டாத சீவனாக அகதியாகவும் வாழ்வதை விட, சொந்த மண்ணில் விடுதலைக்காக ஏதோ ஒருவகையில் உழைத்துப் பங்களிப்புச் செய்து சாவது மேல். அக்கரை பச்சை என்று மதி குழம்பி ஓடுபவன் இறுதியில் வனாந்தரத்தில் வீழ்ந்து சாவான்!

# புழுங்கல் அரிசி சோறே அதிக சத்தானது; பந்திச் சோற்றுக்குப் பருப்பு ஏன்?

யாழ். மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என். சிவராஜா அண்மையில் நடைபெற்ற அறிவியல் கருத்தரங்கு ஒன்றில் "பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களும் போசாக்கும்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையின் முக்கிய பகுதிகளை இங்கே தொகுத்துத் தருகின்றோம். கருத்தரங்கு யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

★ பச்சை அரிசிச் சோற்றை விட புழுங்கல் அரிசிச் சோறே உணவுக்கு நல்லது

★ இயந்திரத்தினால் குற்றப்படும் அரிசியைவிட கைக்குற்றரிசிச் சோறே சிறந்தது.

★ அரிசியை அதிகம் தீட்டி பிசைந்து கழுவி சோறு ஆக்குவதோ அல்லது வடிக்கும் கஞ்சியை ஊற்றுவதோ பயனற்றவை.

★ சிறுவர்கள், நோயாளிகள், வயோதிபர்களுக்கு வறுத்த அரிசி உணவு நல்லது.

★ பந்தியில் சோற்றுடன் பருப்பும் இருப்பது அவசியம்

எம்மில் பலரும் இந்தக் கூற்றுக்களை அறிந்திருக்கின்றோம். ஆனால் தலைமுறை தலைமுறையாகக் கூறப்படும் இக்கூற்றுக்களுக்கான சரியான காரணங்களைத் தெரிந்து வைத்திருப்பவர்கள் நம்மில் ஒரு சிலரே.

சாதாரணமாக நாம் பயன்படுத்தும் அரிசியின் வெளிப்புறம் "அலியோன்" எனப்படும் தோலினால் மூடப்பட்டுள்ளது.

இந்த "அலியோன்" படலத்தை நாம் சாதாரண கண்ணால் அவதானிக்க முடியும். அரிசியில் கூடுதலான அளவில் புரதமும், விற்றமின் "பி"யும் உண்டு. இவை அரிசியின் வெளிப்புற அலியோன் படலத்திலேயே காணப்படுகின்றன.

#### அரிசி தரும் சக்தி

சாதாரணமாக 100 கிராம் அரிசியில் ஏழரைக் கிராம் புரதம் காணப்படுகின்றது. ஒரு கண்டு அரிசியை எடுத்துக் கொண்டால் அதில் எமது உடம்புக்கு நாளாந்தம் தேவைப்படும் சக்தியின் 1/4 பங்கும், புரதத்தேவையின் 1/3 பங்கும் கிடைக்கின்றன என அறியப்பட்டுள்ளது.

எனவே நாம் ஏனைய கறி வகைகள் இன்றி சோற்றினை மட்டும் உண்டாலே எமக்குத் தேவையான சக்தியின் 1/4 பங்கையும், புரதத்தேவையின் 1/3 பங்கையும் நிறைவு செய்யமுடியும்.

அரிசியில் 'அலியோன்' படலத்திலேயே அதிக அளவு புரதம் காணப்படுவதனால், அந்த அலியோன் படலத்தை இழக்காமல் அதை எமது உடலைச் சென்றடைய வேண்டியது அவசியமாகும்.

சாதாரணமாக நாம் அரிசியைக் குற்றித் தீட்டும்போது அதிலும் கூடுதலாக இயந்திரத்தினால் தீட்டும்போது இந்த "அலியோன்" படலம் சிறு கூறுகளாக உடைக்கப்பட்டு பின்னர் அரிசியைப் புடைக்கும்போதோ அல்லது கழுவும்போதோ அவை அகன்றுவிடுகின்றன. இதனால் அரிசியில் உள்ள புரதத்தின் பெரும்பங்கை எமது சமையல் முறையினால் நாம் வீணே இழக்கின்றோம்.

#### புழுங்கல் அரிசியில் புரதம்

பச்சை அரிசியை அவித்து புழுங்கலரிசியாகப் பயன்படுத்தும்பொழுது அரிசியிலுள்ள புரத இழப்பு குறைக்கப்படுகின்றது. அரிசியை அவிக்கும்போது அலியோன் படலம் இறுக்கமடைந்து கரையா நிலையை அடைகிறது — பாதுகாப்புப் பெறுகிறது. இதனால் புரத இழப்பு தவிர்க்கப்படுகிறது. இதுவே உணவிற்கு பச்சை அரிசியைவிட புழுங்கல் அரிசி அதிலும் கைக் குற்றரிசி சிறந்தது என்பதற்கான காரணமாகும்.

சிங்களப் பகுதி மக்கள் பச்சை அரிசியையே தமது உணவிற்கு பெருமளவில் சேர்த்துக் கொள்கிறார்கள்; பச்சை அரிசியில் உள்ள அலியோன் படலம் இறுக்கமற்ற நிலையில் இருப்பதனால் கழுவும்போது அது அகற்றப்பட்டுவிடுகிறது. இதனால் அந்த அரிசிச் சோற்றை உண்போர் புரதம் மற்றும் விற்றமின் 'பி' குறைபாட்டினால் வாய் அவிதல் மற்றும் குறைபாட்டுநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரிசியை சோறாக்கும் போது வடிக்கிறோம்; அப்படி வடிக்கும்போதும் அலியோன் படலமும் கரைந்துச் செல்லப்படுவதனால் அந்தச் சோற்றிலுள்ள புரதம், விற்றமின் "பி' என்பனவும் பெருமளவில் இழக்கப்படுகின்றன. இதனால் வடித்த கஞ்சியை அருந்துவதன் மூலம் அந்தச் சோற்றிலுள்ள புரதத்தைவிட அதிகளவான புரதத்தை எமதுடல் பெறமுடிகிறது.

முன்னைய காலத்தில் சமையல் பந்தி போடும்போது பருப்புக்கறியும் அதில் கட்டாயம் இருக்கும். பருப்புக் கறி போட்டதன் பின்னரே பந்தி அமர்ந்தோர் சோற்றை அருந்த வேண்டுமென்ற வழக்கமும் அப்போதிருந்தது இதற்குக் காரணம்?

அரிசிச்சோறு புரதத்தை அதிகளவில் கொண்டுள்ளது. புரதத்தில் எட்டு முக்கிய அமினோ அமிலங்கள் உள்ளன. இந்த எட்டு அமினோ அமிலங்களையும் கொண்டுள்ள புரதமே நிறைவான போசாக்கையுடையது. அரிசி அதிகளவு புரதத்தைக்கொண்டுள்ள போதிலும் அதில் 'லைசின்' என்னும் புரதத்தின் முக்கிய கூறு அங்கே இல்லை; 'லைசின்' இல்லாத புரதத்தை உடல் பயன்படுத்த முடியாது. இதனால் அரிசிச் சோற்றை உண்பவர் நிறைவான புரத போசாக்கைப் பெற 'லைசின்' உள்ள உணவையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

பருப்பு மற்றும் பயறு வகைகள் 'லைசின்' புரதக் கூற்றை அதிகளவில் கொண்டுள்ளன. இதுவே பந்தியில் சோற்றுடன் பருப்பும் பரிமாறப்படுவதற்கான காரணம். இதனால் அவ்வுணவு நிறைபோசாக்குடைய உணவாக்கப்படுகிறது.

அரிசிமாவில் அவிக்கப்படும் மோதகம், கொழுக்கட்டை, தோசை போன்ற உணவுப் பொருள்களுக்கு "லைசின்' உள்ள பயறு, பருப்பு, உழுந்து வகைகள் உள்ளீடாக வைக்கப்படுவதற்கான உண்மைக் காரணமும் இதுவே. உழுந்தங்களி, முடைமா என்பனவும் இவ்வடிப்படையிலான உணவுப் பொருள்களே.

அரிசியில், அரிசிமாவில், பயறு, உழுந்து வகைகளில் புரதம் கலங்களுக்குள்ளேயே உள்ளன; இவ் உணவுப் பொருள்களை வறுக்கும் போது அக்கலங்கள் உடைக்கப்படுகின்றன. இதனால் அவற்றினுள் உள்ள புரதத்தை உடலினால் இலகுவில் உறிஞ்சிக்கொள்ள முடிகிறது.

சிறுவர்கள், வயோதிபர்கள், நோயாளர்கள் ஆகியோரின் உடல் உணவு மூலக்கூறுகளை உடைக்கக்கூடிய சக்தியை அதிகளவில் கொண்டிருப்பதில்லை; இதனால் வறுக்கப்பட்டு உணவுக்கலங்கள் உடைக்கப்பட்ட உணவுப்பொருள்களை இத்தகையோருக்குக் கொடுக்கும்போது அவர்களின் உடல்களினால் புரதம், விற்றமின்கள் போன்ற உணவுக் கூறுகளை உடனடியாக இலகுவில் உறிஞ்சி, ஜீரணித்துக்கொள்ள முடிகிறது.

வயோதிபர்கள், சிறுவர், நோயாளர்களுக்கு வறுத்த அரிசிமா, வறுத்த உழுந்தில் தயாரிக்கப்பட்ட களி போன்றவை சிறந்ததெனக் கூறப்படுவதற்கான காரணம் இதுவே.

அண்மையில் இங்கு எடுக்கப்பட்ட தரவுக் கணிப்புக்களில் குழந்தைகள் 6 மாத வயதை எட்டியதும் அவர்களின் நிறை குறைவது அவதானிக்கப்பட்டுள்ளது.. குழந்தைகள் 3 - 6 மாதகாலத்திலேயே சுவையை உணரக்கூடிய தன்மையைப் பெறுகிறார்கள். இதனால் இக்காலப்பகுதியில் இத்தகைய போசாக்குணவை தாய்மார் பழக்கப்படுத்த முனையவேண்டும்; ★

## முதூரில் வெள்ளம்

யாழ்ப்பாணம், டிச. 14

திருகோணமலை — மூதூரிலும், இன்னிலாவிலும் கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் அடைமழை காரணமாக அப்பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கந்தளாய் குளத்தின் நீர் மட்டம் மிகவும் உயர்ந்துள்ளது;

சிங்களக் குடியேற்றப் பகுதியான சிறிமாபுர, பள்ளத்தோட்டம் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

(ஓ-3)

## மீண்டும் இலங்கை வெற்றி

கொழும்பு, டிச. 14

நியூஸிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் வெற்றியீட்டியதன் மூலம் இந்த ஒரு நாள் ஆட்டத் தொடரை ஸ்ரீலங்கா அணி 2 — 0 என்ற அடிப்படையில் வென்றது,

நேற்று கொழும்பு செத்தாராம விளையாட்டரங்கில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 49 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 262 ஓட்டங்களைப் பெற்றது.

றொஷான் மஹாநாம 107 அஸங்க குருசிங்க 76 ஓட்டங்களைப் பெற்றனர்; பதிலளித்தாடிய நியூஸிலாந்து அணியால் 230 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

றொஷான் மஹாநாம கடந்த15 தினங்களுக்குள் நியூஸிலாந்து அணிக்கு எதிராக மூன்று "செஞ்சுரி"களை அடித்திருப்பது குறிப்பிடத்தக்கது;

நியூஸிலாந்து இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக நடைபெறாமல் போனதும்—

இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெற்றதும் தெரிந்தவையே. (உ-6)

## அடுத்த ஜனாதிபதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) அதய திட்டம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதியை இரண்டாக உடைத்துவிடும் நோக்கத்தை மையமாகக் கொண்டதே. அதனாலேயே அத்திட்டத்தை தமிழ்க் கட்சிகள் நிராகரித்தன;

இத்தனை காலப் பேச்சுவார்த்தைக்குப் பின்னரும் தமிழ் அரசியல் வாதிகளின் கோரிக்கைகளுக்கும், சிங்கள அரசியல் வாதிகள் வழங்கத் தயாராகவுள்ள சலுகைகளுக்கும் இடையே பெரும் இடைவெளியே காணப்படுகிறது.

சிங்கள அரசியல்வாதிகள் பெரும் பான்மையினராக உள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு இலங்கை ஒருங்கிணைந்த நாடாக இருக்க வேண்டும் என்று நம்புகிறது.

சமஷ்டி அரசமைப்பின் கீழ் வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும் என்ற தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையை ஏற்பதற்குச் சிங்களக் கட்சிகள் தயாராக இல்லை;

சமாதானப் பேச்சு நடத்தும்படி விடுதலைப் புலிகள் எழுப்பிய குரல் பெருமளவில் அலட்சியப்படுத்தப்பட்டது போலத் தெரிகிறது;

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இம்மாதத்துடன் செயல் இழக்குமா? அல்லது அதன் காலம் நீடிக்கப்படுமா என்பது தெரியவில்லை;

தெரிவுக்குழு முன்வைக்கும் எந்தத் திட்டத்தையும் தான் நடைமுறைப்படுத்த தயார் என்று ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் வரை அவர் காத்திருப்பார் என இப்போது பலர் கருதுகின்றனர். ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடக்கும் என்றும் மற்றும் பலர் கூறுகின்றனர் என்று பி. பி. ஸி. செய்தி தெரிவித்தது.

(அ-3)

### தபால்கள் குறித்து இன்று தெரியும்

யாழ்ப்பாணம், டிச. 14

"குமாரி' கப்பலில் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டனவா இல்லையா என்ற விபரம் இன்றுதான் தெரியவரும் என தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

"குமாரி" கப்பலில் வந்த பொருள்கள் பற்றிய பட்டியலில் தபால் பொதிகள் பற்றிக் குறிப்பிடப்படாததால், பிரதம தபாலக அதிகாரிகள் திரும்ப செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் இதுபற்றி விசாரிப்பதாகவும்—

கப்பலின் கப்டனுடன் இன்று காலை தொடர்பு கொண்டு கப்பலில் தபால் பொதிகள் உள்ளனவா என்ற தகவலைத் தெரிவிப்பதாகத் தமக்குக் கூறப்பட்டதாகவும்—சம்பந்தப்பட்ட தபாலக அதிகாரி நேற்று மாலை தெரிவித்தார். (அ-3)

### வலி. மேற்கில் குழாய்க் கிணறு

வலி. மேற்கு பிரதேசசபையினரால் பொதுமக்களின் பாவனைக்கென நான்கு குழாய்க்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அராலி, சுழிபுரம், சங்கானை, கலைநகர் ஆகிய கிராமங்களுக்கே நான்கு குழாய்க்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

